**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.440/2024**

திருமதி. விஜயா (D.W.–2) **03.02.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. முதல்பிரதிவாதி சண்முகம் என்னுடைய கணவர் என்றால் தவறு. என்னுடைய மருமகன். பிரதிவாதிகள் கடன் பெற்ற விவரங்கள் அனைத்தையும் என்னிடம் சொல்வார்களா என்றால் ஒரு சிலதை சொல்வார்கள். இந்த வழக்கில் பதிவாதிகள் எவ்வளவு கடன் பெற்றதாக சொன்னார்கள் என்றால் ரூ.75 ஆயிரம் கடன் பெற்றதாகச் சொன்னார்கள். வாதி கடன் தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் வருமான வரி செலுத்தி வருகிறார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. பிரதிவாதிகள் மொத்தமாக எத்தனை நபர்களிடம் கடன் பெற்றுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எல்லா கடனும் திருப்பி செலுத்தி விட்டார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் எல்லோரிடமும் அவர் கடன் வாங்கவில்லை. வடிவேலிடம் கடன் வாங்கிய விவரம் மட்டும் தெரியும். வடிவேலிடம் பிரதிவாதிகள் கடன் பெற்று திருப்பி செலுத்திய சமயத்தில் அவர்களுடன் நான் சென்றிருந்தேனா என்றால் இல்லை.

3. வடிவேல் இடம் கடன் பெற்று திருப்பி செலுத்திய விபரங்கள் யார் சொல்லி தெரியும் என்றால் இரண்டாம் பிரதிவாதி சொல்லி தெரியும். முதல் விசாரணை சங்கதிகள் அனைத்தும் இரண்டாம் பிரதிவாதி சொலி எனக்குத் தெரியும் என்றால் ஆமாம். முதல் விசாரணை சங்கதிகள் முழுவதும் எனக்கு

நேரடியாக தெரியாது என்றால் சரி. சில விஷயங்கள் மட்டும் தெரியும். வாதியிடம் பெற்ற கடனுக்கு பிரதிவாதிகள் வட்டி செலுத்திய விவரங்கள் தெரியுமா என்றால் வட்டி செலுத்தி வந்தார்கள் கொரோனா காலத்தில் செலுத்தவில்லை. வட்டி பிரதிவாதிகள் வாதியிடம் திருப்பி செலுத்திய சமயத்தில் உடன் சென்றேனா என்றால் இல்லை.

4. பிரதிவாதிகள் வாதியிடம் கடன் பெற்ற சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் என்னுடைய பெண் உடன் அவருடைய வீட்டில் அப்போது நான் இருந்தேன். என்னுடைய மகள் வீட்டில் வாதி வந்து தொகையை கொடுத்து இருந்தாரா என்றால் அவருடைய சகோதரர் ஆனந்தராஜ் தொகையை கொடுத்தார். அப்போது என்ன நேரம் என்றால் காலை என்ன மணி என்பது ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் ஆனந்த்ராஜ் வீட்டிற்கு சென்று கடன் பெற்றார்கள். ஆனந்தராஜ் என்னுடைய மகள் வீட்டிற்கு வந்து கடன் தொகையை கொடுக்கவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல.

5. குறுக்கு விசாரணையில் முதலில் கடன் கொடுத்த சமயத்தில் நான் இல்லை என்று சொல்லிவிட்டு தற்போது முரண்பட்டு இருந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி என்னுடைய மகள் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் சார்பாக நான் தாக்கல் செய்திருக்கும் முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகள் செல்லாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்ன கடன் பெற்றார்கள் எப்போது அதை திருப்பி செலுத்தினார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது என்றால் தவறு.

6. 2003 ஆம் வருடம் கொரோனா காலத்தில் வட்டி செலுத்தவில்லை பத்திரத்தை மீட்க வேண்டும் என்று எங்களிடம் என் மகள் பணம் கேட்டால்

என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கூறுகிறார். கடன் தொகைக்கு என்னுடைய மகள் வட்டி செலுத்தினாரா என்பதெல்லாம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியவில்லை. எந்த தேதியில் கடன் தொகை வட்டியை திருப்பி செலுத்தி சொத்துக்காக அடமானம் வைத்த அசல் ஆவணத்தை திருப்பி கேட்டார் என்றால் வருடம் 2003 தேதி தெரியாது.

7. வாதியிடம் என்ன தொகையை திருப்பி செலுத்தி கடன் அடைக்க என்னுடைய மகள் தயாராக இருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் ரூ.1,50,000/- செலுத்தி கடனை திருப்பி செலுத்த தயாராக இருந்தார் என்று தெரியும். ரூ.1,50,000/- தான் கடன் வட்டி பிரதிவாதிகள் வாதிக்கு திருப்பி செலுத்த வேண்டுமா அல்லது மேலும் செலுத்த வேண்டுமா என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ரூ.1,50,000/- தருவதாக தான் பிரதிவாதிகள் முடிவு செய்திருந்தார்கள். கொரோனா காலத்திற்குப் பிறகும் என்னுடைய மகள் மற்றும் மருமகன் கொரோனா காலத்திற்குப் பிறகும் என்னுடைய மகள் மற்றும் மருமகன் வாதிக்கு வட்டி செலுத்த வேண்டி இருந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் கொரோனா காலத்திற்குப் பிறகு வட்டி கொடுக்கவில்லை என்று என் மகள் என்னிடம் சொல்லி உள்ளார். என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் என் மகளுக்கு ஆதரவாக தவறாக உள்ளதால் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியில்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர். கண்ணன்

கூடுதல் சார்பு நீதிபதி,

திருப்பூர்.